## IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI

**O.S. No.  85 of 2017**

Deposition of **P.W.1**

Name of the Witness: *திரு.தீலிபன்*

Date : **02.11.2023**

**3 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

*2) 1ம் பிரதிவாதி என் பாட்டி இறந்து விட்டார் என்றால் சரிதான். என் பாட்டி 1ம் பிரதிவாதி இறக்கும் போது தனியாக தான் இருந்தார். கடைகளில் வரும் வாடகையை அவரே எடுத்து கொள்வார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 17.10.1967 தேதியிட்ட பாக பத்திரம் 1ம் பிரதிவாதிக்கும் மற்றும் ராஜகோபால்கவுண்டர் குமாரர்கள் சாம்ராஜ், பி..ஆர்.ராஜன், சாம்ராஜ் மனைவி அலமேலுஅம்மாளுக்குள் ஏற்பட்டது என்றால் சரிதான். அது மோசடியாக ஏற்பட்ட பத்திரம். இறந்து போன சாம்ராஜின் வாரிசுகளையும். இறந்து போன பி.ஆர்.ராஜனின் வாரிசுகளாக நான் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். தாவா 1, 3, 4, 5 இன அயிட்ட சொத்துக்கள் 1967ம் வருடத்தில் மங்கம்மாளுக்கு பாகமாக ஒதுக்கப்பட்டதா என்றால் அந்த பாகபிரிவினை பத்திரமே பொய்யானது.*

*3) 1967 தேதிய பாக பத்திரத்தில் மங்கம்மாளுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை தவிர சாம்ராஜ், ராஜன், அலமேலுக்கு ஒதுக்கப்பட்ட*

சொத்துக்களை நான் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். மங்கம்மாள் குடும்பத்தில் எப்போது பாகபிரிவினை ஏற்பட்டது என்றும், யார் யாருக்கு என்னென்ன சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா 2ம் இன சொத்து 1959ம் வருட பாகபிரிவினை பத்திரம் எனது தாத்தா கிருஷ்ணராஜ்க்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி 1, 3, 4, 5 இன சொத்துக்களை என் அத்தைகள் பெயரில் தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்துள்ளார் என்றால் ஆமாம். அந்த செட்டில்மெண்ட பத்திரங்கள் போலியானது. 2ம் இன அயிட்ட சொத்து பொறுத்து 1ம் பிரதிவாதி எந்த ஆவணமும் எழுதவில்லை என்றால் சரிதான். முதலில் தாவா 2ம் இன அயிட்ட சொத்து வீடாக இருந்தது. தற்போது மாடியில் வீடும், கீழ்பகுதியில் கடையும் உள்ளது. 1959 பாக பத்திரத்தில் 2ம் இன சொத்தை தவிர மற்ற சொத்துக்கள் யாரால் விற்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. எனது பாட்டி எனக்கு அதை பற்றி சொன்னார். அத்தைகளின் திருமணத்திற்காக எனது பாட்டி சொத்தை விற்றார் என்பதற்கு கிரைய ஆவணங்களின் நகல் வாங்கி தாக்கல் செய்யவில்லை. என் பாட்டி பணத்தை கையில் வைத்திருந்ததற்கும், லேவாதேவி தொழில் செய்ததற்கும் நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. அதை பற்றி மக்களுக்கு தெரியும்.

4) என் அப்பா என்ன சம்பளம் வாங்கியிருந்தார் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

சொத்துக்களின் வளர்ச்சிக்காக எனது அப்பா பணம் கொடுத்தார் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் அப்பா சொத்துக்களை நிர்வகித்து வந்தார் என்பதற்கு வரி ரசீதுகள் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வரி ரசீதுகள் எல்லாம் 2ம் இன சொத்தான வீட்டு வரி ரசீதுகள் என்றும் கடைக்களுக்கான ரசீதுகள் இல்லை என்றால் சரியல்ல. கடைகளுக்கு வரி செலுத்திய ரசீதுகளும் உள்ளது. தாவா சொத்தின் வளர்ச்சிக்கு எனது அப்பா பணம் கொடுக்கவில்லை என்றும் அவற்றை நிர்வகிக்கவும் இல்லை என்றால் சரியல்ல. 1, 3, 4, 5 இன சொத்துக்கள் 1ம் பிரதிவாதியான எனது பாட்டிக்கு சொந்தமானது என்றும் அதில் நான் எந்த பாகமும் கேட்க முடியாது என்றால் சரியல்ல. அது எனது பாட்டியின் சொத்துக்கள் இல்லை. எனது தாத்தாவின் சொத்துக்கள். என் தாத்தாவின் சொத்துக்கள் என்று நான் சொல்வது பொய் என்றாலும், எனது பாட்டிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் எல்லாமே எனது அப்பாவிற்கு பாகத்திற்கு ஒதுக்கப்படவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டதாக நான் சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. ஊர் பெரியவர்கள் முன்னால் பாகம் ஒதுக்கப்பட்டு என் அப்பா பெயரில் பட்டா, வரி ரசீதுகள் எல்லாம் உள்ளது. 17.10.1967 தேதியிட்ட பாகபிரிவினை பத்திரத்தையும், என் அத்தைகள் பெயரில் ஏற்படுத்தப்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரங்கள் செல்லாது என்று

நான் கேட்பதற்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 சட்டபடியான ஆவணங்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் 1ம் பிரதிவாதியுடன் நான் கூட்டு சுவாதீனத்தில் இல்லை என்பதால் நான் தாவாவில் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது என்றால் சரியல்ல. 1959பாகபிரிவினையில் எனது தாத்தாவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை விற்று எனது அப்பா பணம் எடுத்து கொண்டதால் தாவா 2ம் இன சொத்திலும் எனது அப்பாவிற்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. எளது அப்பா வேலையில் இருந்தார். அவருக்கு சொத்தை விற்க வேண்டிய அவசியம் இல்லை. எனது அப்பா 1980லிருந்து 1993வரை மத்திய அரசில் வேலையில் இருந்தார். என் அப்பா சரிவர வேலைக்கு போகாததால் அவருக்கு வேலையிலிருந்து கட்டாய ஓய்வு அவருக்கு கொடுக்கப்பட்டது என்றால் எனது அப்பா குடிபோதைக்கு அடிமையானதால் அவரால் சரிவர வேலைக்கு போகமுடியவில்லை. வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.